# தஞ்சாவூர் மாவட்டம் அம்மாபேட்டை பேரூராட்சி

## ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

ந.க.எண்.155 /2022/அ1 நாள்: 27.05.2022

## 15வது நிதிக்குழு மான்ய திட்டம் (2020–2021) tied) 2nd Installment

அம்மாபேட்டை தேர்வுநிலை பேரூராட்சிக்கு **15வது நிதிக்குழு மானியம் 2020–2021 (tied) 2nd Installment க்கு** , அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட பணிகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தபுள்ளிகள் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 10.06.2022 ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளை 10.06.2022–ம் தேதி மாலை 3.30 மணிக்கு வருகைபுரிந்த ஒப்பந்தகாரார்கள் முன்னிலையில் திறந்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். **பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 09.06.2022 ஆம் தேதி மாலை 5.45 மணி வரை கீழ்கண்ட வலைதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (https://tntenders.gov.in, http://townpanchayats.tn.gov.in/tender )**

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத் தில்) | ஒப்பந்தபுள்ளி படிவத்தின் கட்டணம் மற்றும் (GST ) | முன் வைப்புத் தொகை (ரூ.) | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | புத்தூர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மேம்பாடு செய்தல் | 9.50 | 1700+270 | 9500 | 60 நாட்கள் |
| 2 | தஞ்சை நாகை சாலை சுகாதாரம் வளாகம் மேம்பாடு செய்தல் | 5.50 | 1700+270 | 5500 | 60 நாட்கள் |
| 3 | நடுப்பட்டி சுகாதார வளாகம் மேம்பாடு செய்தல் | 10.00 | 1700+270 | 10000 | 60 நாட்கள் |
| 4 | சாந்தி நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மேம்பாடு செய்தல் | 5.00 | 750+135 | 5000 | 60 நாட்கள் |
| 5 | உக்கடை ரோடு நேதாஜி காலணி சுகாதார வளாகம் அமைத்தல் | 20.00 | 6000+1080 | 20000 | 90 நாட்கள் |

## நிபந்தனைகள்

1 அம்மாபேட்டை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் அரசு விதிமுறைகளின்படி 2022-23 ஆண்டிற்கு தங்களது ஒப்பந்தகாரர் பதிவை புதுப்பித்துக்கொண்டவர்களுக்கு மட்டுமே ஒப்பந்த படிவங்கள் வழங்கப்படும். மற்றவர்களுக்கு கண்டிப்பாக வழங்கப்பட மாட்டாது.

2 ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் அனைத்தையும் மூடி முத்திரையிட்டு உரையின் மேல் வேலையின் பெயர், பெறுபவர் பெயர் மற்றும் கொடுப்பவர் பெயர் ஆகியோரின் முழு முகவரி தெளிவாக எழுதப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத உறைகள் பிரிக்கப்பட மாட்டாது.

3 ஒப்பந்தப்புள்ளிக்கான முன் வைப்புத்தொகையை பேரூராட்சியில் செலுத்தியதற்கான ரசீது இணைக்கப்பட வேண்டும். முன்வைப்புத்தொகை செலுத்தப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

4 டெண்டர் படிவங்களில் அடித்தல், திருத்தல் ஏதும் இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அதற்கு ஒப்பந்தகாரரால் கையொப்பமிடப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5 வரப்பெறும் டெண்டர்களை பரிசீலனைக்காக பிரிக்கும் போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு செயல் அலுவலரின் தீர்ப்பேமுடிவானதாகும். எந்த டெண்டரையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்கவும் ஒப்புக்கொள்ளவும் செயல்அலுவலருக்கும், பேரூராட்சி மன்றத்திற்கும் உரிமையுண்டு.

6 ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். எந்த டெண்டரையும் ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ மன்றத்திற்கும் அதிகாரம் உண்டு.

7 ஒப்புக்கொள்ளப்படாத மற்றும் வேலை கிடைக்கப்பெறாத ஒப்பந்தகாரர்களுடைய டெண்டர் டேவணித்தொகை மன்றத்தின் பரிசீலனைக்குப் பிறகு காசோலையாக வழங்கப்படும்.

8 ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்த புள்ளி கொடுத்தஒப்பந்தகாரர் வேலை உத்திரவு (Work order) கிடைத்தவுடன் ரூ.20/–க்கு குறையாத முத்திரைத்தாளில் முச்சலிக்கா ஒப்பந்தமும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

9 பட்டியல் தொகையில் கூடுதல் வைப்புத்தொகை 4 % பிடித்தம் செய்யப்படும்.

10 ஒப்பந்தகாரர் உரிய காலக்கெடுவிற்குள் வேலையை செய்து முடிக்கத் தவறினால் தாங்கள் செலுத்தியுள்ள டேவணி தொகை பறிமுதல் செய்து வேலை உத்திரவு (Work order) ரத்து செய்யப்படும். மாற்று ஏற்பாட்டின் மூலம் வேலைகளை நிறைவேற்றுவதால் ஏற்படும் இழப்பிற்கு அவரே பொறுப்பாகும்.

11 ஒப்பந்தகாரர் செலுத்தி இருக்கும் டேவணித்தொகையானது ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்பட்டு அந்நிதியாண்டிற்கான தணிக்கை அறிக்கை கிடைக்கப்பெற்று பிடித்தம் ஏதும் இருப்பின் பிடித்தம் செய்து கொண்டு மீதித்தொகை காசோலை மூலம் வழங்கப்படும்.

12 ஒப்பந்தகாரர் தணிக்கையின் முடிவிற்கு கட்டுப்பட்டவராவார்.

13 பகுதி பட்டியலுக்கு கண்டிப்பாக தொகை பட்டுவாடா செய்யப்பட மாட்டாது. வேலை முழுவதும் முடிந்த பிறகு தான் பட்டியல் தொகை ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.

14 இவ்வேலைக்கு செயல் அலுவலர் நிர்ணயம் செய்யும் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் வேலை முடிக்க வேண்டும். ஒப்பந்தகாரர் தன்னிச்சையாக செயல் அலுவலர் நிர்ணயிக்காத இடங்களில் கட்டக்கூடாது. அவ்வாறு செய்யும் வேலைக்கு தொகை வழங்கப்பட மாட்டாது.

15 வேலை நடைபெறும் இடத்தினை பணி ஆரம்பிக்கும் முன், பணி நடைபெறும் பொழுது, பணி முடியும் நிலையில் ஆகிய மூன்று நிலைகளில் “12 x 8” அளவில் மும்மூன்று புகைப்படங்கள் எடுத்து அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

16 பணி நடைபெறும் இடத்தில் திட்ட விபரம் தெரிவித்து விளம்பரப் பலகை வைக்கப்பட வேண்டும். மேலும் விளம்பரப்பலகை வைக்கப்பட்டதற்கு பணி ஆரம்பிக்கும் முன்னர் புகைப்படம் எடுத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

17 ஒப்பந்தகாரர் வணிகவரி துறை பதிவு செய்யப்பட்டவராக இருக்க வேண்டும்.

18 பட்டியல் தொகையில் வருமான வரி, சரக்கு சேவை வரி மற்றும் இதர வகைள் பிடித்தம் செய்து மீதத்தொகைக்கு காசோலையாக வழங்கப்படும்.

19 ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தமான விவரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

20 ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமாக உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின்படி ஒப்பந்தக்காரரால் வேலை செய்யப்பட வேண்டும்.

21 ஒப்பந்தகாரர்கள் நிலுவையின்றி தொழில்வரி செலுத்தி ரசீது பெற்றிருக்க வேண்டும்.

22 பணியில் காலதாமதம் மற்றும் குறைபாடுகள் இருப்பின் ஆய்வு அலுவலரால் அபராதம் விதிக்கக்கூடும் அல்லது ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்ய நேரிடும்.

23 பணிகளில் போதிய முன்னேற்றம் இல்லையெனில் பணி ஆய்வு அலுவலர்களால் அபராதமோ அல்லது ஒப்பந்தத்தினை ரத்து செய்திடவோ உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

24 திட்டப்பணிகள் நிலுவை வைத்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு பணிகள் வழங்கப்பட மாட்டாது.

**ஒம்.....................**
**திருமதி. ஷோபா ரமேஷ்,**
**தலைவர்.**
**அம்மாபேட்டை பேரூராட்சி**
**தஞ்சாவூர் மாவட்டம்**

**ஒம்.....................**
**திரு.இரா.இராஜா,**
**செயல்அலுவலர்,**
**அம்மாபேட்டை தேர்வுநிலை பேரூராட்சி ,**
**தஞ்சாவூர் மாவட்டம்**

**<u>பெறுதல் ;</u> அம்மாபேட்டை பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்.**

**<u>நகல்:</u>**

1 மாவட்ட ஆட்சி தலைவர் தஞ்சாவூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்க்கப்படுகிறது

2 உதவி இயக்குநர், பேரூராட்சிகள் தஞ்சாவூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

3 உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர்.

4 இளநிலை பொறியாளர் பேரூராட்சி , ஒரத்தநாடு தொகுப்பு.

6 உள்ளூர் மற்றும் வெளியூர் அரசு அலுவலகங்கள்.

7 சம்மந்தப்பட்ட இருப்பு கோப்பு.